


1965ஆம் ஆண்டு இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற மொழிப்போரில் உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூரும் வகையில், நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் மொழிப்போர்த் தியாகிகள் நினைவுத் தூணில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகம். சார்பில் அஞ்சலி நிகழ்ச்சி நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று நினைவுத் தூணிற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி மொழிப்போரில் உயிரிழந்த முருகேசன் என்பவரின் மனைவி சுலோசனாவுக்கு சால்வை அணிவித்து கௌரவித்ததுடன், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் தி.மு.க. சார்பில் ரூ.1 லட்சம் நிதி உதவி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர் பேருந்து நிலையத்தில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் திருவுவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி மகள் திராவிடச்செல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு, மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன்,ஒன்றிய பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, ரெ. அசோகசக்ரவர்த்தி, மா.அன்பழகன், கோ.அறிவழகன், தெய்வ.இளையராஜா, என்.கணேசன், பொன்.செல்வம், ஏ.ஜி.எஸ்.அருண், நகர கழக செயலாளர்கள் வெ.கொ. கருணாநிதி, இரா.முருகேசன், கே.சி.லூயிகதிரவன், எஸ்.ஆர். இராமராஜன் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு

# பிப்.1-ல் தி.மு.க. அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகை!

## மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், ஜன.28-

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சட்டப்பேரவைத் தேர்தல் 2026 திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகின்ற 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில், கடலூர் மேற்கு மாவட்டங்களில் உள்ளவர்களிடம், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில், கழக செய்தி தொடர்புக்குழு தலைவர் டி. கே.எஸ். இளங்கோவன் உயர் கல்வித் துறை அமைச்சர், முனைவர் கோவி.செழியன், தவகல் தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக அயலக அணி செயலாளர், எம்.எம்.அப்துல்லா மு.எம்.பி, கழக செய்தி தொடர்பு குழு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கழக மகளிர்தொண்டர் அணி இணை செயலாளர் திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ, ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகியார் அடங்கிய குழுவினர்கள் வருகை தந்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளை கேட்க இருக்கின்றனர்.



ஆகவே சம்பந்தபட்ட கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும்.

மேலும் கடலூர் மேற்கு மாவட்டத்தை சார்ந்த முந்திரி வியாபார சங்க நிர்வாகிகள் (நெய்வேலி) தொமுச நிர்வாகிகள் வணிகர் சங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கள், தொழிற்சங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் கடலூர் மேற்கு மாவட்ட ஒன்றியகழக நகர கழக பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக்குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென அன்புடன் கோட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தூத்துக்குடி வட்டம் – மாப்பிள்ளையூரணி கிராம கடற்கரை பகுதியில்

# கடலில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுவர்களின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 28 -**

**தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமம், சிலுவைப்பட்டி மொட்டை கோபுரம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த மூன்று சிறுவர்களின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தும், நிதியுதவியும் வழங்கியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமத்தைச் சேர்ந்த செல்வன். திருமணி (வயது 13) த/பெ.வனராஜன், செல்வன். நரேன் ஸ்ரீ கார்த்திக் (வயது 12) த/பெ.ஆறுமுகம் மற்றும் செல்வன்.முகேந்திரன் (வயது 12) த/பெ.கதிரேசன் ஆகிய மூன்று சிறுவர்கள் நேற்று (26.01.2026) மாலை சுமார் 04.15 மணியளவில் மாப்பிள்ளையூரணி கிராமத்தில் உள்ள சிலுவைப்பட்டி மொட்டை கோபுரம் கடற்கரை பகுதியில் கடலில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று சிறுவர்களின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### குத்தாலம் அரசு கலை–அறிவியல் கல்லூரியில் – இந்தாண்டு முதல்

# புதிதாக சமூக நீதிக்கல்லூரி மாணவியர் விடுதி தொடங்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் அறிவிப்பு!

சென்னை, ஜன.28-

குத்தாலம் அரசு கலை அறிவியல் கல்லூரியில் இந்த ஆண்டு முதல் புதியதாக சமூக நீதிக் கல்லூரி மாணவியர் விடுதி தொடங்கப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

எஸ்.ராஜகுமார்: மயிலாடுதுறை தொகுதியில் கூடுதலாக பிற்படுத்தப்பட்டோர் மற்றும்



மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது?

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்: மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி, மயிலாடுதுறை நகரத்தில் மூன்று சமூக நீதி கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளும் சொந்தக் கட்டடத்தில் சிறப்பாக செயல்பட்டு வருவதால் கூடுதல் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை என்பதனை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ்.ராஜகுமார்: எங்களுடைய மயிலாடுதுறை தொகுதியில் மட்டும் இதுவரையில் எட்டு கல்லூரிகள் உள்ளன. குறிப்பாக அரசு ஞானாம்பிகை கல்லூரியில் 2,500 மாணவர்களும், AVC கல்லூரியில் 4,850 மாணவ, மாணவிகளும், அதேபோல தருமபுரம் ஆதின கல்லூரியிலே 1,850 மாணவ, மாணவிகளும், மணல்மேடு கலை கல்லூரியிலே 1,078 மாணவ, மாணவிகளும், ARC, Deen போன்ற போன்ற தனியார் கலை கல்லூரிகளிலே 1,200 மாணவர்கள் மற்றும் AVC பொறியியல் கல்லூரியைச் சேர்த்து மொத்தம் 15,000 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கூடுதலாக 200 மாணவர்கள் தங்கக்கூடிய அளவிற்கு விடுதி வசதி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன்.

அதனடிப்படையில் 2023-2024-ஆம் ஆண்டிலே 100 மாணவர்கள் தங்கக்கூடிய விடுதி கட்டுவதற்கான ஒப்புதல் வரப்பெற்று, அதற்கான இடத்தைக் கேட்டார்கள். இடமும் தேர்வு செய்து தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு தொடங்குவார்களா என அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்: கல்லூரி, பள்ளி மாணவி விடுதிகளில் சாதி அடையாளங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகவும், ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது என்பதற்காகவும், சமத்துவம் நிலவ வேண்டும் என்ற அடிப்படையில், சமூக நீதி காத்த சரித்திர நாயகர் முதலமைச்சர் அவர்கள் கல்லூரி, பள்ளி விடுதிகளை “சமூக நீதி விடுதி” என்று பெயர் மாற்றம் செய்து மாணவச் செல்வங்களிடத்திலே, தமிழக மக்களிடத்திலே மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மயிலாடுதுறை நகரத்தில் இருக்கின்ற கல்லூரிகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார். நானும் அறிந்ததுதான்! AVC கலை அறிவியல் கல்லூரி, தருமபுரம் ஆதீனம் கலை அறிவியல் கல்லூரி, ARC அரசு கலை அறிவியல் கல்லூரி, என்று மூன்று கல்லூரிகள் இருக்கின்றன.

அந்த அடிப்படையில், 15,000 மாணவ, மாணவிகள் பயின்று வருவதை நானும் அறிவேன். அந்த அடிப்படையில் விரைவில் மயிலாடுதுறை நகரத்தில் புதிதாக சமூக நீதிக் கல்லூரி மாணவியர் விடுதி தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு, அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, புதிய கட்டடம் வரும் நிதியாண்டில் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, அதேபோல, மணல்மேடு அரசு கலை அறிவியல் கல்லூரி அங்கிருக்கின்ற சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த கட்டடத்திற்கான இடம் கண்டறியப்பட்டுள்ளது.

விரைவில் அதற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். ராஜகுமார்: மிக முக்கியமான பிற்படுத்தப்பட்ட பகுதி என்கின்ற அடிப்படையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலே அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மிக முக்கியத்துவம் அறிந்து, அதற்கான நிதியை விரைவாக அளித்து அந்தத் திட்டத்தை துவங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாறு கேட்டு அமர்கின்றேன்.

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்: அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொண்டு, கூடுதலாக அந்த மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் என்ற முறையில் குத்தாலம் அரசு கலை அறிவியல் கல்லூரியிலும் இந்தாண்டு முதல் புதியதாக சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதி தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# மன்னார்குடி ராஜகோபாலசுவாமிகள் கோயில் கும்பாபிஷேகம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று சிறப்பிக்கிறார்!

*திருவாரூர், ஜன.28-*

*திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியின் பெருமைகளில் முக்கியமானதாக கருதப்படும் ராஜகோபாலசுவாமிகள் கோயில் தொன்மையையின் அடையாளமாக கருதப்படும் வைணவ கோவிலாகும். இந்த கோவிலின் கும்பாபிஷேகம் இன்று (புதன் 28.01.2026) நடைபெறுகிறது.*

*18 சன்னதிகள், 7கோபுரங்கள் என பிரமாண்ட அமைப்புடன் உள்ள இந்த கோவிலை சீரமைக்க மன்னார்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்தபோது டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வைத்த கோரிக்கைகளை கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கண்டு கொள்ளாத நிலையில், தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அனுமதியின்படியும், அறநிலைய துறை அமைச்சர் சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா அவர்களின் முன்னெடுப்பிலும், அறங்காவல் குழு தலைவர் கருடா இளவரசன் அவர்களின் தலைமையிலான ஆன்மீக நிர்வாகிகள் மேற்பார்வையில் மிகச்சிறப்பாக நடந்தேறி முடிவடைந்துள்ளன.*

*அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் மேற்பார்வையில் அனைத்து துறை அதிகாரிகளின் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு, பாதுகாப்பு சுகாதாரம், போக்குவரத்து சீரமைப்பு பணிகள் மிகச்சிறப்பக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*சுமார் 16 கோடிகள் மதிப்பீட்டில் அரண்மனையைப்போல மிகுந்த கவனமுடன் சீரமைப்பு பணிகள் நடைபெற்ற மன்னார்குடி ராஜகோபாலசுவாமிகள் கோயில் கும்பாபிஷேகம், இன்று (புதன் 28.01.2026) நடைபெறுகிறது. லட்சோப ஆன்மீக மக்கள் இன்று இந்த கும்பாபிஷேகத்தில் பங்கேற்கின்றனர்.*

### இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்

# இரா.சிவஞானம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 28-

இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.சிவஞானம் (வயது 73) நேற்று (25.1.2026 - திங்கள்) மறைவுவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த இரா.சிவஞானம் சுமார் 54 ஆண்டு காலம் கழக பணியாற்றியவர். 19 வயதில் கழகத்தில் இணைத்து கொண்ட அவர், வாலாஜா தெற்கு ஒன்றியம் - நவ்லாக் கிராமத்தின் முதல் கிளைக் கழக செயலாளர், மாவட்டப் பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். இரண்டு முறை ஊராட்சி மன்ற தலைவராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.


# தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். **38/CPT**, பேரவை இணைப்பு எண். **26**) நிர்வாகிகள் தேர்தல் 25.01.2026 அன்று பேரவை இணைப்பொதுச்செயலாளர் **ஜெ.விஜயகுமார்** அவர்களை ஆணையாளராகக் கொண்டு திருச்சி பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**சங்க நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | – | ச. நடராசன் |
| துணைத் தலைவர்கள் | – | 1) அ. சத்தியராஜ் |
| | | 2) G. ராஜேந்திரன் |
| | | 3) N. சரவணன் |
| | | 4) மு. முருகேசன் |
| | | 5) மு. சடாச்சரம் |
| பொதுச்செயலாளர் | – | பா. மணிமாறன் |
| பொருளாளர் | – | தே. முரளிகுமார் |
| அமைப்புச் செயலாளர் | – | மு. மீனாட்சிசுந்தரம் |
| துணைப்பொதுச்செயலாளர்கள் | – | 1) R. ராமமூர்த்தி |
| | | 2) P. சண்முகம் |
| | | 3) K. வேல்முருகன் |
| | | 4) V.S. அருண்சங்கர் |
| | | 5) தே. மெய்ஞானமூர்த்தி |
| | | 6) கு. மணிகண்டன் |

இடம்:கலைஞரகம்
நாள்:25.01.2026

**மு.சண்முகம்,** Ex.MP
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை